**தலைப்பு 276 - பதுளை மாவட்ட செயலகம்**

.....................................................................................

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதுளை மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஏப்ரல் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

…………………………………………………………………………………………..

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட

கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

……………………………………………………………..……

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) பதுளை மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

...........................................................................

### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

..................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................................... | ................................................ | ........................ |
| திறைசேரி அச்சுப் பிரதிகள் 82 மற்றும் ACA 6 படிவத்திற்கு இணங்க ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்களின் மொத்தம் ரூபா 2,655,070,783 ஆக இருந்த போதிலும் அது திரண்ட விபரமான பரீட்சை மீதியில் ரூபா 83,682,068 ஆக காட்டப்பட்டிருந்ததனால் ரூபா 2,571,388,715 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | திறைசேரியினால் சில விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் இந்த வித்தியாசத்திற்கு காரணமாக இருந்தது. | திணைக்கள ஏடுகள் திறைசேரி அச்சுப் பிரதிகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சரியான கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 05 வைப்புக் கணக்குகள் தொடர்பான ரூபா 11,306,447 தொகையான காலாவதியான வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 5,451,894 தொகையான 04 வைப்புக்களின் மீதிகள் 02 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 5,854,553 தொகையான 01 வைப்பு மீதி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் கணக்குகளில் காட்டப்பட்டன. | பிணை வைப்பாக வைக்கப்பட்ட வைப்புக்களை விடுவிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்திருக்காதது டன் சில வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | காலாவதியான வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலாகக் காட்ட வேண்டிய ரூபா 15,499,239 மூலதனச் செலவுகள் மற்றும் ரூபா 291,925 இயலுமை மேம்பாட்டுச் செலவுகள் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் தனியாகக் காட்டுவதற்கு ஒரு இடம் இல்லாததனால் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டது. | காசுப் பாய்ச்சல் சரியாக வகைப்படுத்தப்பட்டு காசுப் பாய்சல் கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். |

**(இ) சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

**.......................................................................................................................**

**அவதானிப்புக்கள்**

**.........................**

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| ................................ | | | ...................... | ...................... | ................. |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>................... | | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 137 (5) | 03 பிரதேச செயலகங்கள் தொடர்பான வவுசச்சர்களில் குறிப்பிட்ட பொருட்கள் அலுவலகத்திற்கு கிடைக்காதிருந்தும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்ட ரூபா 2,356,627 பெறுமதியான 12 காசோலைகள் 2022 சனவரி 31 ஆந் திகதி வரையும் கையில் வைக்கப்பட்டிருந்தது. | வழங்கல்கள் பொறுப்பேற்க்கப்பட்டா திருந்தும் அரசாங்கத்தின் பிரமாணங்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு இணங்க பொருட்கள் தொடர்பான எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது. | பொருட்களை களஞ்சியத்திற்கு பொறுப்பேற்க்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதுடன் முடியுமான அளவு விரைவாக கோசோலையைய பணம் பெறுனருக்கு ஒப்படைத்தல் வேண்டும். |
| | (ii) | நிதிப்பிரமாணம் 371 (2) | ஏதாவது நிர்ணயிக்கப்பட்ட செயற்பாட்டிற்காக வழங்கப்படுகின்ற உப கட்டுநிதியானது அச்செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் பஸ்ஸர பிரதேச செயலகத்தின் நான்கு உத்தியோகத்தர்களுக்கும் பதுளை மாவட்ட செயலகத்தின் நான்கு உத்தியோகத்தர்களுக்கும் 13 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட | வழங்கப்பட்ட கட்டுநிதியை தீர்த்துவைப்பதைன தாமதிக்க வேண்டாம் என உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. | உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் கட்டுநிதி தீர்த்துவைக்கப்படதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உப கட்டுநிதியை தீர்த்துவைக்கும் போது 05 நாட்களிலிருந்து 57 நாட்கள் வரையான தாமதம் காணப்பட்டது. | | |
| (ஆ) | (i) | 2006 நவம்பர் 29 ஆந் திகதிய ABK/N/1/2/22 ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | எல்ல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர்களினால் பிரிவில் பிடுங்கப்பட்ட 28 பலா மரங்கள் தொடர்பாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகள் தொடர்பாக பொழிப்பாக்கிய அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கப்படவில்லை. | மாதாந்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கிராம உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| | (ii) | 2006 திசெம்பர் 15 ஆந் திகதிய 19/2006 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | ஓய்வூதியக்காரர் மரணமடைந்ததன் பின்னர் 07 நாட்களுக்குள் கிராம உத்தியோகத்தரினால் பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தியிருக்காததன் காரணமாக 02 பிரதேச செயலகங்களினால் 16 மரணமடைந்த ஓய்வூதியக்காரர்களுக்கு ரூபா 404,415 ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. | ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற திகதியின் பின்னர் இடம்பெறுகின்ற வித்தியாசங்களை மேற்கொள்வதற்கு முடியாது எனவும் இடம்பெறுகின்ற தாமதங்களை தவிர்க்க முடியாது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (iii) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | வருகை மற்றும் வெளிச் செல்லல் நேரங்கள் விரல் அடையாளமிடும் இயந்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படாது 2021 ஆம் ஆண்டில் 03 பிரதேச செயலகங்களினால் மேலதிக நேர வேலைப்படிகளும் விடுமுறை நாள் சம்பளங்களுமாக ரூபா 2,540,388 தொகை செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | வருகை மற்றும் வெளிச்செல்லலினை பதிவுசெய்யும் பதிவேட்டினை பேணுதல் மாத்திரம் போதுமானதாகத் தெரிவிக்கப்பட்டது. | விரல் அடையாளமிடும் இயந்திரத்தில் குறிப்பிட்ட நேரங்களை அடிப்படையாகக் கொண்டு சுற்றறிக்கையின் பிரகாரம் மேலதிக நேர வேலைப்படிகள் மற்றும் விடுமுறை தின சம்பளங்கள் செலுத்தப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பண்டாரவளை பகல் நேர கவனிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மகளிர் சிறுவர் விவகார மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு ரூபா 6,000,000 நிதி ஏற்பாட்டினை வழங்கியிருந்தும் அது பயன்படுத்தப்படவில்லை. பண்டாவளை பிரதேச சபையினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 4,819,338 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் செயற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணப் பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் பதிவு செய்த வழங்குனரிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தும் ஒரு வழங்குனரும் சமர்ப்பித்திருக்கவில்லை என தெரிவிக்கிறேன். | கால தாமதமின்றி செயற்திட்டங்களை பூர்த்தி செய்தல் வேண்டும். ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தி பொது மக்களுக்குனு பிரதிபலன்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சமுர்த்தி மனைப் பொருளியல், நுண்பாக நிதி சுயதொழில் வாய்ப்பு மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 04 பிரதேச செயலகங்களுக்கு ரூபா 35,462,350 தொகை விடுவிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் செயற்திட்டம் முடிவடைந்திருக்கவில்லை. சொரணாதொட பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்த உபகரணங்கள் 2022 பெப்ரவரி மாதம் வரை பிரதேச செயலகத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | பண்டாரவளை சொரணாதொட கந்தகொடிய பிரதேச செயலகத்தினால் பதில் வழங்கியிருக்காததுடன் ஹப்புத்தளை பிரதேச செயலகத்தின் செயற்திட்ட அறிக்கைக்காக 2021 ஒக்தோபர் 12 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதனால் கொள்வனவு நடவடிக்கை தாமதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. | செயற்திட்டத்தினை உரிய காலத்திற்குள் பூர்த்திசெய்து எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தென்னை, கித்துள், மற்றும் பனைப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துதல் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பொருட்களை உற்பத்திசெய்தல் | சேதனப் பசளை தயாரிக்கும் இயந்திரத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பெற்றுக்கொள்வதற்கு முடியவில்லை. 2022 மே 23 | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஏற்றுமதியை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் ரூபா 5,970,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் சொரணாதொட பிரதேச செயலகப் கிரிவில் அமுல்ப்படுத்தப்பட்ட கித்துள் அபிவிருத்தி செயற்திட்டம் 2021 ஒக்தோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு திசெம்பர் மாதம் இறுதியளவில் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,181,937 செலவு செய்து உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் 2022 பெப்ரவரி 10 ஆந் திகதி வரை நலன்பெறுனர்களுக்கு எதுவித உபகரணமும் வழங்கப்படவில்லை. | ஆந் திகதியில் 30 இயந்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மிகுதியான இயந்திரங்களை எதிர்காலத்தில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஈ) | இடர் முகாமைத்துவ அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்ட இயற்கை அனர்த்தங்களால் இன்னல்களுக்கு உள்ளாகிய மக்கள் மீளக்குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2021 ஆம் ஆண்டளவில் மீளக்குடியமர்த்த வேண்டிய 4149 குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட 315 குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 310,693,494 நிதி ஏற்பாட்டில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 240,552,513 செலவு செய்யப்பட்டிருந்தும் 55 குடும்பங்கள் மாத்திரம் மீளக்குடியமர்த்தப்பட்டிருந்தனர். | பதில்வழங்கப்படவில்லை. | நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட வேண்டியதுடன் ஆபத்திற்கு உள்ளாகியுள்ள மக்களை அந்த இடங்களிலிருந்து அப்புறப்படுத்தி மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

..................................................................................................................................

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்தவேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ............................................... | .............................. | ......................... |
| (அ) | மாவட்ட செலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் செய்து அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மாவட்ட செயலகம் அதுபற்றி தெரிந்திருக்காததுடன் எதிர்காலத்தில் அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.11 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படவில்லை. | புதிய கணக்காளரும் பதில் கணக்காளரும் இருப்பதனால் பதில் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் வேலையை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்த்திருந்த ஹாலி-எல பிரதேச செயலகக் கட்டிடம் மற்றும் மஹியங்கன பிரதேச செயலகக் கட்டிடத்தினை நிர்மாணித்தல் என்ற செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கட்டிடப் பொருட்களை வழங்கும் ஒப்பந்தக்காரருக்கு பணத்தை செலுத்த முடியாதிருந்ததனால் அவர் முகங்கொடுத்த நிதிச்சிக்கல் மற்றும் கொவிட் தொற்று நோயின் காரணமாக உருவாகிய தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்ட நிலைமையின் அடிப்படையில் கட்டிட நிர்மாண நடவடிக்கை தாமதமடைந்திருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்து உரிய செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 எதிர்பார்த்த மட்டம் அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் வெலிமடை பிரதேச செயலகத்தினால் ரூபா 594,174 செலவு செய்த 2017 திசெம்பர் 19 ஆந் திகதி வேலை முடிவடைந்த புனித தோமஸ் கல்லூரியின் பக்க சுவர் 2022 மே 31 ஆந் திகதி வரையும் பயன்படுத்துவதற்கு எடுத்துகொள்ள முடியாது காணப்பட்டது. | அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ள நிறுத்திவைத்தல் பணத்தை பெற்று பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்படும் என தெரிவிக்கிறேன். | செயற்திட்டத்தினை பூர்த்தி செய்து பயன்பட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கந்தகெடிய பிரதேச செயலகத்தினால் 2019 கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிரிவெல கெடியவிலிருந்து கிகிரிபூதாம வரையான நீர் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக 2019 | பொருத்தப்பட்டிருந்த Box Bar கள்வர்களால் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் தண்ணீர் மோட்டரின் பொருள் விபர குறிப்பினை உறுதிப்படுத்துவதற்காக கொள்வனவு செய்த | செயற்திட்டத்தினை பூர்த்திசெய்து பயன்பாடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | யூலை 22 ஆந் திகதி சமூர்த்தி சமூக அடிப்படை அமைப்புடன் ரூபா 993,398 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக ரூபா 966,336 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி 24 ஆந் திகதி பௌதீக பரீட்சிப்பின் போது மதிப்பீட்டில் குறிப்பிட்ட நிறைவேற்றப்படாத 03 வேலைகளுக்காக ரூபா 45,663 செலுத்தப்பட்டிருந்தது.<br><br>5000L அளவான பிளாஸ்ரிக் நீர்த்தாங்கிக்காக ரூபா 2,574 செலவு செய்து gate Valve பொருத்தப்பட்டிருக்காததுடன் தண்ணீர் மோட்டாரினை இனங்காணக்கூடிய தொகுதி இலக்கம் அழிக்கப்பட்டிருந்தது. ரூபா 116,400 செலவு செய்து கொள்வனவு செய்து பொருத்தப்பட்டிருந்த தண்ணீர் மோட்டார் செயற்பாடற்றுக் காணப்பட்டதனால் நலன்பெறும் குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கப்படவில்லை. செயற்திட்டத்தின் இறுதி விலைப்பட்டியலுக்கு பணம் செலுத்தும் போது அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிட்ட அளவினை விட ரூபா 12,941 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் நிறுத்திவைத்தல் பணத்திலிருந்து கழி-க்கப்படும். | |
| (இ) | 2019 கம்பெரலிய துரித நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கந்தகொடிய பிரதேச செயலகத்தினால் ரூபா 1,224,750 செலவு செய்து ட்ரக் 02 வீட்டுக்கு அருகில் வெலஓயாவினூடாக ஒரு பாலம் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் திட்டமிடல் மற்றும் அமுல்ப்படுத்தல் பலவீனத்தின் அடிப்படையில் காணப்பட்ட அதிக மழையினால் பாலத்திற்கும் கொங்கிரீட் வீதிக்கும் பௌதீக ரீதியாக சேதங்கள் ஏற்பட்டுள்ளன. | குளக்கரைக்கும் தெற்கு கரைக்கும் பக்கச்சுவர்கள் இல்லாததனால் நீர் வழிகள் தடைப்பட்டதனால் நிலம் அரிப்பிற்கு உள்ளாகி கொங்கிரீட் தளம் வெடித்துக் காணப்பட்டது. | செயற்திட்டத்தினை முறைப்படியாக திட்டமிட்டு பூர்த்திசெய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சமூர்த்தி மனைப் பொருளாதாரம், நுண் நிதி சுய தொழில் வாய்ப்பு, வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் ரூபா 35,605,877 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் பதுளை மாவட்டத்தின் 02 பிரதேச செயலகங்களில் அமுல்ப்படுத்தப்பட்ட 02 இலட்சம் சமூர்த்தி குடும்பங்களை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 21,545,879 செலவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்து கொள்ளப்படவில்லை. | கொரோனா தொற்றுநோய் நிலைமையினால் உபகரணங்களை பெற்றுக்கொள்ளுதல் தாமதமடைந்துள்ளது. | செயற்திட்ட நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்க எடுத்தல் வேண்டும். |

### 3.3 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் மாகாணத்தை மேம்படுத்தும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊவாபரணகம பிரதேச செயலகத்தினால் ரூபா 982,560 பணத்திற்கு உடன்படிக்கை செய்த நகஹடிய விளையாட்டுச் சங்கத்தின் இரவு பகல் கரைப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தினை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைகள் 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் 2022 சனவரி 13 ஆந் திகதி வரையும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணபப்பட்டது. | விளையாட்டு மைதானத்தினை விளையாட்டு நடவடிக்கைகளுக்காக திறந்து பிரதேச சபைக்கு முறைப்படியாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செயற்திட்டத்தின் பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 06 இந்துக் கோவில்களை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளுக்காக ரூபா 600,000 தொகையும் 02 இந்துக் கோவில்களின் | இந்துக் கோவில்களின் தேவைப்பாட்டினைத் தெரிவிக்கும் கடிதத்தினை சமர்ப்பித்தல் தாமதத்தினால் மதிப்பீட்டினைத் தயாரிக்க முடியாதிருந்தது. | நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி ஆண்டின் போது செயற்திட்டத்தினைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 180,000 ஆக ரூபா 780,000 தொகை 2021 ஆகஸ்ட் 12 ஆந் திகதி ஹப்புத்தளை பிரதேச செயலகத்திற்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் 2022 மே 23 ஆந் திகதி வரை எந்த செயற்திட்டமும் ஆரம்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | ஹாலிஎல பிரதேச செயலகத்தினால் இரண்டு கட்டிடங்களின் கீழ் புத்தசாசன சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் ரூபா 4,000,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கந்தன பிரதேசத்தில் அமுல்ப்படுத்தப்பட்ட கலாச்சார சுற்றுலா மேம்பாட்டு செயற்திட்டத்தின் கீழ் இபெரணி கைத்தொழில் தொழில்நுட்ப கலைக் கிராமத்தினை நிர்மாணிக்கும் வேலைக்காக ஊவா கந்தன முதியோர் கூட்டமைப்பிற்கு ரூபா 3,231,920 செலுத்தப்பட்டிருந்தது. 2021 நவம்பர் 30 ஆந் திகதியளவில் அதன் வேலை பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2022 மே 23 ஆந் திகதி வரை குயவர் இல்லம், மீன்பிடி இல்லம், குளம், வேடர் இல்லம், சுரங்க வாடி, கிராமத்து கடை ஆகிய நிர்மாணங்கள் முடிவடைந்திருக்கவில்லை. | 2022 மே 23 ஆந் திகதியளவில் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் முடிவடந்துள்ளன. | செயற்திட்ட நிர்மாணங்கள் முடிவடைந்து நலன்கள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | மஹியங்கனை பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 140,961,320 உடன்படிக்கை செய்யப்பட்ட பணத்திற்கு 2017 திசெம்பர் 18 ஆந் திகதி Finite Lanka நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2022 மார்ச் 15 ஆந் திகதி வரை ரூபா 109,020,394 செலவு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதியிலிருந்து 546 நாட்களுக்குள் வேலை முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 15 ஆந் திகதி வரை வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட தொற்று நோய் நிலைமையின் காரணமாக உருவாகிய தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறை நிர்மாணப் பொருட்களை எடுத்துச் செல்வதிலுள்ள சிக்கல் என்பன தாக்கமளித்திருந்தன. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அத்திகதியில் வேலை தாமதமடைந்த காலம் 1547 நாட்களாக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட காலத்தினை விட மூன்று மடங்கிற்கு அண்மித்ததாக இருந்தது. | | |
| (ஈ) | கிராமிய மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் அமைச்சின் ரூபா 6,000,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 5,636,026 மதிப்பீடு செய்யப்பட்ட கிரயமான பண்டாரவளை மத்திய மஹாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தினை அபிவிருத்தி செய்வதற்காக பண்டாரவளை பிரதேச செயலகத்தினால் 4''-6'' வரையான மரக் கட்டைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2021 விலை நிர்ணயித்தல் குழுவின் அறிக்கையின் பிரகாரம் ஒரு மீற்றரின் விலை ரூபா 100 ஆக இருந்த போதிலும் ஒரு மீற்றருக்கு வழங்குனரின் விலை ரூபா 520 ஆக 1665 அடி நீளத்திற்காக ரூபா 699,300 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2022 சனவரி 24 ஆந் திகதி வரை வேலை முடிவடைந்திருக்கவில்லை. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் கொள்வனவு செய்தல் நடவடிக்கைகள் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் செய்யப்படாமையின் காரணமாக பொருட்கள் மதிப்பீட்டின் 55 சதவீதம் அளவிற்கு கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் ரூபா 5,539,696 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட மணல் துண்டுக் கற்கள் மற்றும் நிர்மாணப் பொருட்கள் நிர்மாண காணியில் அளவீடு செய்யும் வகையில் குவித்து (Filling) வைக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு செய்யப்பட்ட | கேள்விதாரருடன் வாய்மொழிமூலம் கலந்துரையாடப்பட்டிருந்தும் விலைகளில் மாற்றம் செய்ய முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. | கொடுப்பனவுகளை சான்றுபடுத்தும் போது விலை விகிதங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் அரசாங்கத்தின் பொருட்களைப் பெறுதல், வழங்குதல், களஞ்சியப்படுத்துதல் என்பன தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயற்திட்ட நிர்மாணங்களை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அளவுகள் வேலைத்தளத்திற்கு வழங்கப்பட்ட அளவுகள் மற்றும் மீதிகள் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நாளாந்த பொருள் பயன்பாடு மற்றும் மீதிகளின் அறிக்கை தயாரிக்கப்படாததுடன் சான்றுபடுத்தப்பட்ட பூர்த்தியடைந்த வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளும் மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

### 3.5 உள்நாட்டு நிதிகளிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பண்டாரவளை பிரதேச செயலகத்தினால் விளையாட்டுத் துறை அமைச்சின் ரூபா 1,833,070 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட பண்டாரவளை மாநகர சபை விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் நடை பாதையினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் போது நிறைவேற்வேற்றப்பட்டுள்ளது என பௌதீக ரீதியாக இனங்காணமுடியாத 02 விடயங்களுக்காக ரூபா 198,320 செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தினை நடைபாதையாக பயன்படுத்தக்கூடிய வகையில் இனங்காணமுடியாததுடன் பல இடங்களில் இரண்டு நபர்கள் அருகருகே பயணம் செய்ய முடியாத குறுகிய இடம் காணப்பட்டது. | நிர்மாணக் குறைபாடுகள் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் நிறுத்திவைத்தல் பணம் விடுவிக்கப்படும் காணியின் அமைவிடத்திற்கு இணங்க சில இடங்களில் பாதையை விரிவுபடுத்த முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. | மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் வினைத்திறனாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தியதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.6 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| எல்ல அருக்கு நவய பாலத்திற்கு செல்லும் மாற்று வீதியினை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்கான கேள்வியினை மதிப்பீடு செய்யும் போது ரூபா 5,921,418 தொகையான ஆகக்குறைந்த கேள்வி தொடர்பாக கேள்விதாரரினால் முன்னைய ஒப்பந்தங்களின் அனுபவம், நிதிரீதியான வளங்களின் இயலுமை மற்றும் தகமைகள் என்பவற்றை மதிப்பீடு | ஆகக்குறைந்த கேள்வியை சமர்ப்பித்த கேள்விதாரரினால் தேவையான கோவைகள் அனைத்தும் சரியாக சமரப்பிக்கப்பட்டிருக்காததனால் ஆகக் குறைந்த கேள்வி நிராகரிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செய்வதற்கு போதிளலவு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக நிராகரிக்கப்பட்டு இரண்டாவது ஆகக் குறைந்த கேள்வியான ரூபா 6,357,337 தொகையான கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.
ஆகக்குறைந்த கேளிவியினைச் சமர்ப்பித்த கேள்விதாரரின் அனுபவத்தையும் தகமைகளையும் அக்கேள்விதாரருடன் கலந்துரையாடி மீண்டும் பரீட்சித்து பெறுகை செய்வதன் மூலம் மிகவும் சாதகமான நிலைமையினை நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தாது இரண்டாவது ஆகக்குறைந்த கேள்வியினை தெரிவு செய்யததன் காரணமாக ரூபா 435,923 நட்டம் ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (அ) பிரிவிற்கு இணங்க பெறுகையினை பெற்றுக்கொள்ளும் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மண்சரிவு ஆபத்து இல்லை என தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடியது என மாவட்ட பொறியியலளாலரினால் சான்றுபடுத்தப்பட்ட எல்ல பிரதேச செயலகத்தைச் சார்ந்த பல்லேபேருவ கிராம உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ இல்லத்தினை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 12 ஆண்டுகள் விளைவற்றுக் காணப்பட்டன. | முறையான பொறியியலாளரின் ஆலோசனையின் கீழ் அந்த இடத்திலேயே புதிய ஒரு கட்டிடத்தினை நிர்மாணிக்கலாம். எதில்காலத்தில் அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பேன். | அரசாங்க ஆதனங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டியதுடன் பாதுகாப்பு சம்பந்தமாக போதியளவு ஒழுங்கு விதிகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். |

## 3.8 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பதுளை மாவட்ட செயலகத்தின் 03 மோட்டார் சைக்கிள்கள், பிரதேச செயலகத்தின் ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் 02 பிரதேச செயலகங்களின் 02 கெப் வாகனங்கள் என்பவற்றை திருத்தம் செய்வதற்கு அல்லது பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 05 ஆண்டுகளிலிருந்து 16 ஆண்டுகள் வரையான காலமாக பயன்படுத்தப்படாது அலுவலக வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. | கைதவிர்ப்புச் செய்வதற்கு முன்னர் உரிமையை பொறுப்பேற்று சில வாகனங்கள் திருத்தம் செய்யக்கூடியது எனவும் சில வாகனங்களுக்காக புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் சில வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. | திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு அல்லது ஏனைய பொருத்தமான நடைமுறை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3.9 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ)** ஊவா பரணகம பிரதேச செயலகத்தின் ஒரு கெப் வாகனம் 2010 ஆகஸ்ட் 25 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியயிருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட நட்டமான ரூபா 500,000 தொகை 2022 மார்ச் 21 ஆந் திகதி வரையும் அறவிடப்படாததுடன் வாகனத்தை திருத்தம் செய்து ஓடும் நிலைக்கு கொண்டு வருவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மாவட்ட செயலக வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | 2019 மே 15 ஆந் திகதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும் விபத்தினால் ஏற்பட்ட நட்டத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய சாரதி சேவையை கைவிட்டுச் சென்றுள்ளார் எனவும் அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | திருத்தம் செய்தல் அல்லது கைதவிர்ப்புச் செய்தல் அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மதிப்பீட்டு நட்டத்தை பொறுப்புக் கூறக்கூடிய நபரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** ஊவா பிரதேச செயலகத்தின் ஒரு கெப் வாகனம் 2015 செப்தெம்பர் 04 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் ஏற்பட்ட ரூபா 70,834 நட்டத்தினை காப்புறுதியின் போது மீளளிப்புச் செய்யமுடியாத | விசாரணை அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 64,459 தொகை 2022 மார்ச் 21 ஆந் திகதி வரையும் நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு அல்லது ஏனைய நடைமுறைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **(இ)** | எல்ல பிரதேச செயலத்தின் ஒரு கெப் வாகனம் 2010 நவம்பர் 03 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியதால் ஏற்பட்ட ரூபா 1,400,000 நட்டத்தினை அறவீடு செய்வதற்காக பொறுப்புக் கூறக்கூடிய நபருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு 2019 ஒக்தோபர் 07 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க நடவடிக்கை எடுத்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கு 2022 மார்ச் 24 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஒக்தொபர் 07 ஆந் திகதி வழக்கு தீர்ப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும் அது சம்பந்தமாக மேன்முறையீடு செய்யப்பட்டதுடன் மேன்முறையீட்டின் பின்னைய தீர்ப்பின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| **(ஈ)** | நிதிமாலியத்த பிரதேரச செயலகத்தின் ஒரு கெப் வாகனம் 2017 யூலை 29 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் ஏற்பட்ட ரூபா 6,349,333 நட்டத்தில் ரூபா 2,500,000 காப்புறுதியின் மூலம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. 2022 மார்ச் 24 ஆந் திகதி வரையும் காப்புறுதியின் மூலம் மீளளிப்புச் செய்யப்படாத ரூபா 3,849,333 நட்டம் அறவீடு செய்யப்படவில்லை. காப்புறுதி இழப்பீட்டுப் பணம் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன் வாகனத்தை திருத்தம் செய்வதற்கு அல்லது பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அலுவலக வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | வாகனத்தை திருத்தம் செய்வதற்காக பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கேள்விகள் கோரப்பட்டுள்ளதுடன் வாகனத்தின் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு முடியாமை மற்றும் நிதி ஏற்பாடு இல்லாமையினால் திருத்தம் செய்தல் நடவடிக்கை தாமதமடைந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| **(உ)** | பதுளை மாவட்ட செயலகத்தின் ஒரு கெப் வாகனம் 2017 ஆகஸ்ட் 18 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியதனால் 2019 பெப்ரவரி 12 ஆந் திகதியளவில் திருத்தம் செய்யப்பட்டது. விலைப்பட்டியல் பெறுமதி ரூபா 3,057,331 ஆக இருந்ததுடன் காப்புறுதியின் மூலம் மீளளிப்புச் செய்யப்படாத ரூபா 126,095 பணத்தை செலுத்தி வாகனத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2022 மார்ச் 24 ஆந் திகதியளவில் 03 ஆண்டுகள் காலமாக திருத்தம் செய்து கராஜில் பயன்படுத்தப்படாது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | செலுத்த உள்ள மிகுதிப் பணத்திற்காக நிதி ஏற்பாட்டினை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன் நிதி ஏற்பாடு கிடைக்காமையின் அடிப்படையில் வாகனத்தை விடுவித்துக்கொள்ள முடியாதுள்ளது. | கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனத்தை விடுவித்து அரசாங்க செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

..............................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................................ | .............................. | ......................... |
| ஊவா பரணகம பிரதேச செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 493,279 உடன்படிக்கை செய்யப்பட்ட பணத்திற்கு ஒரு தொண்டர் அமைப்பின் மூலம் நிறைவேற்றப்பட்ட கிரவனாகம பிரதான பஸ் வீதியிலிருந்து வஹுகாலதென்ன வரையான வீதிக்கு கொங்கிரீட் இடும் வேலைவயில் நிறைவேற்றப்படாத 02 விடயங்களுக்காக ரூபா 15,445 செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | மதிப்பீட்டில் குறிப்பிட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என பரீட்சித்ததன் பின்னர் கொடுப்பனவுகள் சிபார்சு செய்யப்பட்டு சான்றுபடுத்தப்படுதல் வேண்டும். |

### 3.11 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 29 ஆந் திகதியிலிருந்து 2022 மார்ச் 22 ஆந் திகதி வரையான காலத்திற்குள் வழங்கப்பட்ட 13 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2022 ஏப்ரல் 19 ஆந் திகதி வரை பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வாளரின் வெற்றிடம் காணப்படல், கணக்காய்வு ஐய வினாக்கள் கணக்குகளை முடிவுறுத்தும் காலத்தில் சமர்ப்பித்தமை ஆகிய விடயங்களின் காரணமாக பதில் வழங்குவதில் தாமதமடைந்துள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டதிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.12 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 10 பிரதேச செயலகங்களின் மூலம் மகளிர் பணியக கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012-2020 இற்கு இடைப்பட்ட காலத்தில் 188 நலன் பெறுனர்களுக்கு எதிர்பார்த்த கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் பணத்தில் ரூபா 1,513,454 அதமாகையும் சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 92 நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்ட கடன் பணத்தில் ரூபா 354,939 தொகையும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மீகஹகிவுல பிரதேச செயலகத்தினால் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது எனவும் வெலிமடை, ஹப்புத்தல, பஸ்ஸர ஆகிய பிரதேச செயலகங்களினால் எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன் 06 பிரதேச செயலகங்களினால் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 ஏப்ரல் 27 ஆந் திகதியிலிருந்து யூன் 05 ஆந் திகதி வரையான காலத்தில் ஏற்பட்ட இடர் நிலைமையின் காரணமாக சேதமடைந்த வீடுகளுக்கு ரூபா 10,000 வரையான இழப்பீட்டினை செலுத்துவதற்காக 2021 | பதில் வழங்கப்படவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் போது இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தோபர் 28 ஆந் திகதி மாவட்ட செயலகத்தினால் பஸ்ஸர பிரதேச செயலகத்திற்கு ரூபா 130,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அக்காலப் பகுதிக்குள் இடம்பெற்ற 10 வீடுகளின் பாதிப்புக்களுக்காக 2021 நவம்பர் 23 ஆந் திகதி வரையும் இழப்பீடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 05 பிரதேச செயலகங்களினால் பல்வேறு கடன் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 4976 சமூர்த்தி நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்ட கடன் பணத்தில் ரூபா 219,692,070 கடன் மீதி காலம் கடந்திருந்தும் 989 நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்ட கடன் பணத்தில் ரூபா 42,997,627 கடன் ஐயக் கடனாக இணங்காணப்பட்டிருந்தது. இந்நிலுவைக் கடனை றெவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஹப்புத்தலை பிரதேச செயலகத்தினால் கடன் தவணைப்பணத்தினை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டதுடன் சொரனாதொட ,கந்தகெடிய, ஹாலி எல எல்ல ஆகிய பிரதேச செயலகங்களால் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | கடன் தவணைப் பணத்தை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்ன் போது அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு உத்தியோகத்தர்கள் இடம்மாற்றம் பெற்றுச்செல்வார்களாக இருந்தால் அந்த மாகாண சபையிடமிருந்து உரிய கடன் பணத்தை ஒரே தடவையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதுடன் அவ்வாறு அறவீடு செய்ய முடியாது போனால் மாதாந்த தவணைப்பணமாகவேனும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மாகாண சபை நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடமிருந்து | ஊவா மாகாண சபைக்டகு கடன் மீதியினை தீர்த்துவைக்கமாறு தெரிவிக்கப்பட்டிருந்தும் தவணை ரீதியாகவோ தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடவேண்டிய 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 653,965 மீதிகள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | பதுளை மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டு ஓய்வுபெற்ற சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் 03 நபர்களின் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 185,281 கடன் மீதியினை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியத்திலிருந்து அறவீடு செய்வதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் சில கடன் மீதிகள் தவணை ரீதியாக அறவிடப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | பல்வேறு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பிழையான வரவு வைத்தல்கள் மற்றும் பிழையான செலவு வைத்தல்களின் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிட வேண்டிய கடனின் கீழ் ரூபா 81,550 தொகையான 02 கடன் மீதிகளும் செலுத்த வேண்டிய கடனின் கீழ் ரூபா 14,067 தொகையான 02 கடன் மீதிகளும் முற்பணக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன. அப்பிழையான பதிவுகளை இனங்காணப்பட்டு ஒரு மாதத்திலிருந்து 05 ஆண்டுகள் வரையான கால வீச்சு எடுத்திருந்தும் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | போதிளயவு தகவல்கள் கிடைத்திருக்காததுடன் தகவல்கள் கிடைத்த உடன் எதிர்காலத்தில் தீர்த்துவைக்கப்படும். | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நுழைவு வீதிகளை நிர்மாணித்தல் கிராமிய நீர் வழங்கல் நீர்ப்பாசன நடவடிக்கைகள் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் ஏற்றுமதி விவசாய செயற்பாடுகள் ஆகிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களில் 20 சதவீதத்திலிருந்து 57 சதவீதம் வரையானவை மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்படவில்லை. | கட்டிட பொருட்களின் பற்றாக்குறை அரசாங்க நிதி மூலங்களில் உருவாகிய வழமைக்கு மாற்றமான தாமதங்களினால் ஒப்பந்தக்காரர்களின் விலைப்பட்டியலுக்கு பணம் செலுத்த முடியாமை, அடிக்கடி உருவாகிய ஊரடங்கு சட்ட நிலைமையின் அடிப்படையில் ஒப்பந்த பதவியணியினரின் போக்குவரத்து நட்வடிக்கையும் பொருட்களை எடுத்துச் செல்லலும் தடைப்பட்டிருந்தமை என்பன காரணமாக இருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை சிறந்த மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு உத்தியோகத்தர்கள் வினைத்திறனாக செயற்படுத்தல் வேண்டும். |

## 5. மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதுளை மாவட்ட செயலகத்தினை மற்றும் 15 பிரதேச செயலகங்களுக்கான அங்கீகரித்த பதவியணியின் 26 பதவிகளில் 191 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதில் வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களும் மிகைகளும்மின்றி சிறப்பாக பதவியணியினரை பேணுதல் வேண்டும். |